# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 389/2023 |
| Prosecution Witness | : | **அ.சா.**2 |
| Name | : | **சதீஸ்** |
| Father's / Husband Name | : | **செல்லப்பன்** |
| Address | : | **சத்திரமனை, வேலூர்** |
| Age | : | 32/2024 |

**<u>தேதி : 02.12.2024</u>**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சென்னையில் டிசைனராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். மேற்கண்ட எதிரிகளை பெரம்பலூர் போலீஸார் கைது செய்து வைத்திருப்பதாக தகவல் கூறியதன் பேரில் கடந்த 01.12.2022 அன்று பெரம்பலூர் காவல் நிலையத்திற்கு பார்த்தேன். கடந்த 30.08.2022 அன்று எங்கள் வீட்டு வாசலில் Hero Honda Splender TN 46F8938 என்ற இருசக்கர வாகனத்தை இரவு 10.30 மணி அளவில் நிறுத்திவிட்டு தூங்கிவிட்டோம். மறுநாள் காலை 4.00 மணி அளவில் என் தகப்பனார் செல்லப்பன் வயலுக்கு செல்வதற்காக எழுந்து பார்த்தபோது மேற்படி இரு சக்கர வாகனத்தை காணவில்லை. தேடிபார்த்தபிறகு கிடைக்கவில்லை. பின்னர் இதுசம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் மனு நான் கொடுத்ததுதான். **புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி காணாமல் போன இருசக்கர வாகனத்தின் மதிப்பு சுமார் ரூ.20,000/- இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ள இருசக்கர வாகனம் நல்லுசாமியினுடையது. **இருசக்கர வாகனம் உள்ள புகைப்படம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வண்டி காணாமல் போனது 30.08.2022 என்றால் சரிதான். 03.09.2022 அன்று புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். தாமதமாக புகார் கொடுத்தற்கு காரணத்தை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வாகனம் திருடுபோனதை யாரும் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் வாகனத்தை எடுத்து சென்றார்களா என்று நான் பார்க்கவில்லை மற்றவர்களும் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீஸார் என்னை 2, 3 முறை விசாரித்தார்கள் என்றால் சரிதான். எந்த போலீஸார் எப்போது என்னை விசாரித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். புகாரில் என்ன எழுதியிருக்கிறது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் தெரியும். காணாமல் போன வண்டி நல்லுசாமியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான், நல்லுசாமி புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.